டிசம்பர் 2025

திராவிட வாசிப்பு

வாசிப்பும் மீள்வாசிப்பும்

திருநர் சில பாடங்களும் புரிதல்களும்



A Rational Analysis of People Leaving Hinduism

வணக்கம்.

இந்த இதழுக்காக பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள் எழுதித்தந்த தோழர்களுக்கு எங்களது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

திராவிட வாசிப்பு குறித்த உங்களது மேலான கருத்துகளை, விமர்சனங்களை எதிர்பார்க்கிறோம். கீழ்காணும் மின்னஞ்சலுக்கு உங்கள் கருத்துகளை சொல்லுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். நன்றி!

உங்கள் படைப்புகளையும், கருத்துகளையும் இந்த மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்: dravidavaasippu@gmail.com

கட்டுரைகளை திராவிட வாசிப்பு ஆன்லைன் பக்கத்திலும் வாசிக்கலாம்: https://blog.dravidiansearch.com/

இதுவரை வெளியான திராவிட வாசிப்பு மின்னிதழ்களை “கிண்டிலில்” வாசிக்க: https://www.amazon.in/s?i=digital-text&rh=p_27%3ADravida%2BVaasippu&s=relevancerank&text=Dravida+Vaasippu&ref=dp_byline_sr_ebooks_1

இதுவரை வெளியான திராவிட வாசிப்பு மின்னிதழ்களை “ஆன்லைனில்” வாசிக்க: https://drive.google.com/drive/folders/1-6Sk8TylSzrCfiU0BJ-_Osvh7DRFCl0z?usp=sharing

இப்படிக்கு,

திராவிட வாசிப்பு Editorial Team:

- (அருண் ஆஷ்லி, அசோக் குமார் ஜெ, அஷ்வினி செல்வராஜ், தினேஷ் குமார், ஜெகன் தங்கதுரை, கதிர் ஆர்.எஸ்., மதுமலர், மனிதி தெரசா, இராஜராஜன் ஆர். ஜெ, டிமோத்தி, யூசுப் பாசித், விக்னேஷ் ஆனந்த், விஜய் ஜி.எஸ், பிரபு கணேஷ்)

திருநர்: சில பாடங்களும் புரிதல்களும் – இனியன்

Gen Z மற்றும் Gen Alpha குழந்தைகள் குறித்தான பார்வையில் அவர்கள் மீதான தாக்குதல்களே அதிகம். ஆனால், அவர்களுக்கே என்று சிறப்பான பக்கங்களை எல்லாம் சற்று ஆராய்ந்து பார்த்தால், அவற்றில் சில சொற்கள் பெரும்பான்மையினருக்கு அறிமுகமே ஆகியிருக்கவில்லை என்பது பெரும் ஆறுதல் கொடுக்கக்கூடியதாகவே இருக்கிறது. அவற்றில் திருநர்களைக் கொச்சையாக வசைபாடும் வார்த்தைகள் எதுவும் அவர்களிடம் புழக்கத்தில் இல்லை. கூடவே அதே வார்த்தைகளை வசைமொழியாகவும், கிண்டல் கேலியாகவும் பயன்படுத்தப்படும் வார்த்தைகளாகவும் கூட இல்லை என்பது சமகாலக் குழந்தைகளின் மத்தியிலான எனது அனுபவங்களில் ஒன்றாகவே இருக்கிறது.

ஆனால், சமீபத்தில் குக்கிராமம் ஒன்றில் குழந்தைகளுடனான மாலை நேரச் செய்தித்தாள் வாசிப்பு அமர்வு ஒன்றில் “திருநங்கை” என்னும் சொல்லுக்கான அர்த்தம் கேட்டபோது, 7ஆம் வகுப்பு படிக்கின்ற குழந்தை, “9” ன்னு சொல்லுவாங்களே அவர்கள்தானே எனத் தயங்கியபடியே கேட்டுக் கொண்டிருந்தார். வெவ்வேறு வயதில் கிட்டத்தட்ட 40 குழந்தைகள் அமர்ந்திருந்த இடத்தில் ஒரேயொரு குழந்தை மட்டுமே, மிகவும் தயங்கியபடியே கேட்டது முதலில் ஆச்சரியத்தைக் கொடுத்தாலும், அந்த வார்த்தை அவருக்கு எப்படி அறிமுகமானது எனத் தெரிந்துகொள்ள முயற்சி செய்தால், அவர் சொன்ன பதில், “வீட்டில் அப்பா சொல்வார்” என்பதாக இருந்தது.

இங்கே பல அடிப்படைவாதப் பிரச்சினைகளுக்கு வீடும், குடும்பக் கட்டமைப்பும்தான் காரணம் என்னும் புரிதல் எப்போதுமே இருப்பதால், அந்தக் குழந்தைக்கு அப்படியெல்லாம் சொல்லக் கூடாது என்பதில் தொடங்கி, “திருநங்கை, திருநம்பி, திருநர், மாற்றுப் பாலினத்தவர் போன்ற சொற்கள் எப்படி உருவாகின, அதற்குப் பிறகான சமூக மாற்றங்கள் எப்படியெல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன, இன்னும் நாம் போகவேண்டிய தூரம் எது” என்றெல்லாம் அனைத்துக் குழந்தைகளிடமும் சொல்லிக் கொண்டிருந்தேன். சிலருக்கு இப்போதைக்குப் புரியவில்லை. சிலருக்குப் பாதி புரிந்து இருந்தது. பதின் பருவத்தில் இருந்த குழந்தைகளுக்கு முழுவதுமே புரிந்திருந்தது.

இப்படியான உரையாடல் ஒன்றைக் குழந்தைகளுடன் செய்தது இதுவே முதல் முறை என்பதால், அன்றைய தினம் இரவு “எனது குழந்தைப் பருவத்தில் என்ன மாதிரியான புரிதல்களும் அனுபவங்களும் இருந்தன” என்னும் நினைவுகள் பலவாறு சென்று

கொண்டிருந்தன. உண்மையில் 80கள் மற்றும் 90களில் குழந்தைகளாக இருந்தவர்கள் அனைவருக்குமே இப்படியான அனுபவங்கள் இருந்திருக்கும். அவற்றைக் கடக்காதவர்களே இல்லை எனச் சொல்லும் அளவிற்கு நம் அனைவரின் குழந்தைப் பருவங்களும் அமைந்திருக்கும்.

“அலி”, “9”, “அஜக்கு”, “உஷ்”, “அரவாணி” போன்ற வார்த்தைகளைக் கடக்காமல் வந்தே இருந்திருக்க மாட்டோம். நான்காம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோதுதான் என நினைக்கிறன். அக்காவுடன் ஏற்பட்ட சண்டையில் “போடி 9” எனச் சொன்னதற்காக வீட்டில் உள்ள பெரியவர்கள் அனைவரும் அடித்த அடி இன்றைக்கும் நினைவில் இருக்கிறது. அப்படியெல்லாம் சொல்லித் திட்டக் கூடாது, அதுவும் கூடப் பிறந்த அக்காவை இப்படியெல்லாம் சொல்லிவிடக் கூடாது என்பதுதான் அவர்களின் வார்த்தைகளாகவே இருந்தன. அப்போதும் கூட அது என்ன வார்த்தை என்றெல்லாம் யாரும் புரியவைக்கவில்லை. ஆனால், அதுவொரு அவமானகரமான சொல் என்பதை ஆணித்தரமாகப் பதிவு செய்திருந்தனர்.

இவற்றைக் கடந்து மேல்நிலைப் பள்ளி வகுப்பிற்குள் சென்றால், குரலில் மாற்றமோ அல்லது கீச் குரல், உடல்வாகு மற்றும் உடல் மொழியில் பெண்களைப் போன்ற செயல்பாடுகளை இயல்பிலேயே பெற்றிருக்கும் சக நண்பர்களை “அவன் ஒரு அஜக்கு” எனச் சொல்லிக் கிண்டல் கேலிகள் நடைபெறும். அதனைச் சில ஆசிரியர்களுமே செய்தனர் என்பதையெல்லாம் தற்போது சிந்திக்கும்போது பெரும் வேதனையாகவே இருக்கிறது.

அடுத்ததாக நண்பனுடனான சண்டையில், “அப்போதைய பட்டப்பெயருடன் இணைத்து போடா அலி” என்று என்னை அவன் திட்டியபோது கோபத்தின் உச்சிக்குச் சென்று அவனை மருத்துவமனைக்குச் செல்லும் அளவிற்குக் கடித்துவைத்து இன்று வரை தொடர்பற்றுப் போகும் அளவிற்கான நட்பு முறிவு ஏற்படக் காரணமாக இருந்த சொல்லாக “அலி” என்னும் சொல் இருந்தது.

பள்ளிக் காலத்தில் இவ்வளவுதான் புரிதல்கள். அதிலும் பதின் பருவத்துக் காலத்தில் கூடப் பெரிய அளவிலான புரிதல்களை ஏற்படுத்திக் கொடுக்கும் கட்டமைப்புகள் இங்கே அறவே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். பாலியல் கல்விக்கான கட்டமைப்பே இங்கே இல்லாதபோது மாற்றுப் பாலினத்தவர்கள் மற்றும் திருநர்கள் குறித்த கல்வியா இங்கே நடைமுறையில் வரப்போகிறது.
ஆனால், இந்தச் சமூகத்தில் பாலியல் குறித்த கற்றல்கள் எப்படி வகுப்பறைக்கு வெளியேவே உரையாடல்கள் மூலம் மட்டுமே தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருப்பதுபோலவேதான்,

இவர்கள் பற்றிய கற்றல்களும் வகுப்பறைக்கு வெளியே உரையாடல்கள் மற்றும் வாழ்வியல் அனுபவங்கள் மூலம் தொடங்குகிறது. அப்படியான தொடக்கம் எனது பட்டயக் கல்லூரி இரண்டாம் ஆண்டில் நடந்தது.

நள்ளிரவுப் பேருந்துப் பயணத்தின் சன்னலோர இருக்கைப் பயணம். திருச்சியின் புறநகர்ப் பகுதி ஒன்றில் ஊர்த் திருவிழா. அதில் புடவை கட்டிய பெண்களின் உருவ அமைப்பைக் கொண்ட சிலர், பொதுவெளியில் புடவையை முழுவதுமாகத் தூக்கிக் காட்டியபடியே நடனம் ஆடிக் கொண்டிருந்தனர். அவர்களைச் சுற்றிப் பெருந்திரளான ஆண்கள் கூட்டம் நின்று, உற்சாக மிகுதியில் சத்தமிட்டுக் கொண்டும் இணைந்து நடனமாடிக் கொண்டும் இருந்தனர்.

இந்தக் காட்சியை அன்றைய எனது நாள்காட்டியில் கூடப் பதிவுசெய்து வைத்திருக்கிறேன். (அப்போதெல்லாம் தினசரி டைரி எழுதும் பழக்கம் இருந்தது.) மறுநாள் இதுகுறித்து நெருங்கிய அண்ணன் ஒருவருடன் நீண்ட உரையாடல் ஒன்றை நிகழ்த்தினேன். அதுதான் திருநர்கள் குறித்த வாழ்வின் முதல் உரையாடல். அப்போதெல்லாம் திருநர் என்னும் சொல் அறிமுகமாகியிருக்கவில்லை. அதனால், அந்த அண்ணன் எனக்கு விளக்கங்கள் கொடுத்தபோதெல்லாம் “அலி” என்ற சொல்லையே பயன்படுத்தினார்.

முழுதாக இல்லை என்றாலும், குறிப்பிட்ட அளவிலான புரிதல் அந்த உரையாடல் மூலம் கிடைத்தது. இருந்தாலும், விளக்கம் சொல்லிய அந்த அண்ணனும் கூட ஒருவித வெறுப்பும், கோபமும் கொண்டு, அறிவியல் காரணங்கள் எதுவும் இல்லாமல், அவர்களின் வாழ்வியல் சூழல்களை மட்டுமே சொல்லிக் கொண்டிருந்தார். அத்தனை வெறுப்புகள் அவரது வார்த்தைகளில் இருந்ததை அப்போதே உணர முடிந்தது. அந்த வெறுப்புணர்வை எனக்குள் ஏற்றிக் கொள்ளாமல் மேற்கொண்டு தெரிந்துகொள்ள வேண்டும் எண்ணம் மட்டுமே இருந்தது.

அதுமுதல் நண்பர்களுடனும் நிறைய உரையாடல்கள் நிகழ்த்தத் தொடங்கியிருந்த நேரத்தில் ஓரளவிற்குப் புரிதல் கிடைத்திருந்தது. இந்தக் காலகட்டத்தில்தான் அலி என்னும் சொல்லுக்கு மாற்றாக “அரவாணி” என்னும் சொல்லும் அறிமுகமாகியிருந்தது. இந்தச் சூழலில்தான் புரிதல்களை மேலும் அதிகரிக்கும் விதமான செய்தி ஒன்று 2006ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் தேதி அனைத்து செய்தித்தாள்கள் மற்றும் அப்போதைய அன்றாடச் செய்திகள் என அனைத்திலும் “அரவாணி என்னும் சொல்லுக்கு பதிலாக திருநர் என்றுதான் சொல்லப்பட வேண்டும்” என்ற அரசாணை அன்றைய முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியால் வெளியிடப்பட்டது. அத்தோடு இல்லாமல், 2008ஆம் ஆண்டு இந்திய ஒன்றியத்தில் முதல் முறையாகத் தமிழ்நாட்டில் திருநர்கள் நலவாரியம் ஒன்றையும் உருவாக்கினார் கலைஞர்.

அதன் பிறகு 2015ம் ஆண்டு, ஏப்ரல் 24ம் நாள் தி.மு.க-வின் மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா அவர்கள் திருநர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் தனிநபர் மசோதா ஒன்றையும் கொண்டு வந்து, அதனை நாடாளுமன்றத்தில் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றபட்டப் போது, நாடு முழுவதும் திருநர்கள் குறித்த விழிப்புணர்வுகள் பரவலாக்கபட்டன.

இவை அனைத்தும் இந்தப் பொதுச் சமூகத்தில் ஒருவித சலசலப்புடன் கூடிய விவாதம் ஆனதால், செய்தித்தாள்களில் தினசரி அது தொடர்பான செய்திகள் சிறிது காலம் வந்துகொண்டே இருந்தன. அவை அனைத்தையும் தேடியெடுத்து வாசித்துக் கொண்டே இருந்ததால் மிகப்பெரிய அளவிலான புரிதல் ஏற்படத் தொடங்கியது. மேலும் அப்போதைய மருத்துவ நண்பர்கள் சிலரிடமும் உரையாடல்கள் செய்யும் வாய்ப்பு கிடைத்ததால் அறிவியல் பூர்வமான விளக்கங்களும் பெற முடிந்தது.

“திருநர்” என்னும் சொல் சமூகப் புழக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டு. கிட்டத்தட்ட 20 ஆண்டுகளை நெருங்கி விட்டிருக்கிறோம். பல போதாமைகள் அவர்களுக்கு இருந்தாலும், இந்த இருபது ஆண்டுகளில் அவர்கள் சமூகமாக அடைந்திருக்கும் மாற்றம் என்பது மிகப்பெரியது. அதேபோல் இந்தப் பொதுச் சமூகமும் அவர்களை அங்கீகரிக்கத் தொடங்கியுள்ளது. வெளிப்படையான பல பணிகளில் திருநர்கள் இருக்கிறார்கள். அப்படியானவர்களுடன் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் பழகும் வாய்ப்பு கிடைத்துள்ளதால், புரிதல் மட்டுமின்றிப் பலவிதமான வாழ்வியல் அனுபவங்களும், அவர்களின் உரிமைக்காக உடன் நிற்கும் பொறுப்பும் அதிகரித்துள்ளதாகவே தனிப்பட்ட முறையில் பலமுறை உணர்ந்திருக்கின்றேன்.

இந்த உணர்த்தல்கள் பல உரையாடல்களை ஏற்படுத்தித் தந்துள்ளன என்றால் மிகையாகாது. “திருநர்” என்னும் சொல் உருவாகக் காரணமாக இருந்தவர்கள் முதற்கொண்டு, கொரோனா முற்றடைப்புக் காலகட்டத்தில், ஒன்றிணைந்து செயல்பட்டு குக்கிராமங்கள் வரை பயணித்து உதவியவர்கள், நாடகக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், இயக்குநர்கள், கதை சொல்லிகள், பள்ளி ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், செயற்பாட்டார்கள் எனப் பலதரப்பட்ட திருநர்களுடன் எல்லாம் பழகும் வாய்ப்பு கிடைத்துக் கொண்டேதான் இருக்கிறது. பழகப்பழக அவர்களின் அன்றாடங்கள் முதல் வாழ்வியல் கதைகள் என அனைத்தும் கேட்டுக் கிடைக்கப்பெற்ற அனுபவங்களின் தொகுப்பு என்பது ஏராளம் என்றே சொல்வேன்.

அதுமட்டுமின்றி இங்கே பரவலாக உலக அளவில் உள்ள LGBTQ+ சமூக மக்கள் குறித்த பார்வைகளைப் பெறத் தொடங்கியதும் இந்த இருபது வருடங்களில்தான். அதில் நானும்

ஒருவனாகவே இருக்கிறேன். அறிவியல் பூர்வமான இயற்கை வாழ்வியலே LGBTQ+ மக்களின் வாழ்வியல். ஆனால், அவர்களை இன்றைக்கும் நம் சமூகத்தில் இருந்து தனிப்படுத்தும் செயல்பாடுகள் நடந்துகொண்டேதான் இருக்கின்றன. அவை அனைத்தும் முழுவதுமாக மாற இன்னும் பெரும் போராட்டங்களை அவர்கள் சந்திக்க வேண்டிய தேவைகள் இருக்கின்றன. அதற்குச் சமூகமாக அவர்களுடன் கரம் கோர்த்து நாமும் நிற்க வேண்டும் என்ற பொறுப்பும் கடமையும் எனக்கு மட்டுமின்றி நம் அனைவருக்குமே இருக்கிறது என்பதை ஆணித்தரமாகக் கூறுகிறேன்.

கூடவே அவசியம் இவை அனைத்தும் Gen Beta காலகட்டத்தில் பெரும் மாற்றங்களைச் சந்திக்கும் என்னும் நம்பிக்கையும் இருக்கிறது. இந்த நம்பிக்கைக்குக் காரணம், பல வழிகளில் இன்றைக்கு திருநர் சமூகம் குறித்தான புரிதல்களை ஏற்படுத்திக்கொள்ளும் விதத்தில் சிறார் புத்தகங்கள் முதல் கலவையான படைப்புகள், திருநர் சமூகத்துப் படைப்பாளிகள், அறிவியல் விளக்கக் காணொளிகள், உரிமை காக்கும் பேரணிகள், அவற்றில் பங்கேற்கும் மக்களின் எண்ணிக்கை என அனைத்தும் இங்கே அடுத்தடுத்த கட்டங்கள் நோக்கி விரைவாக நடக்கத் தொடங்கியுள்ளன. அதனால், அனைவரையும் உள்ளடக்கிய கூட்டுச் சமூக வாழ்வியல் நோக்கி வருங்காலம் மிகச் சிறப்பாக அமைத்திடும் என்பதில் ஐயம் எதுவும் இல்லை என்பதையும் மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உலகத்தில் எதன்பாலும் சமூகமாகப் புறக்கணிப்பட வேண்டியவர்கள் மற்றும் ஒடுக்கப்பட வேண்டியவர்கள் என எந்தவொரு மனிதரோ, சமூகமோ இருந்துவிடக் கூடாது என்பது மட்டுமே இலக்காக மானுடம் போற்றும் அனைவருக்கும் இருந்திட வேண்டும் என்பதைத் தவிர முடித்துக்கொள்ள வேறில்லை.

#இனியன்

Tamil Nadu Is the Antidote To Ayodhya - Kanmani

Thirupurakundram: A Historic Site

The *Thiruparankundram temple*, a 6th-century monument and veneered place of worship for the Tamil deity *Murugan*, has co-existed with a Sufi *Dargah*, a homage to the ruler and mystic Sikandar Shah, since the 17th century. The hill, which is mentioned in sangam literature like the *Tolkappiyam, Thirukkural, and Silappadhikaram* as a holy site of Lord *Murugan*, is also a spot where a jain monk is said to have fasted until death around the 6th century; archeological findings reveal significant jain relics in the mount. The hill also hosts the *Kasi Vishvanathar temple*, where the deity is praised as early as the 7th century in the *Tevaram*. Much like the socio-political fabric of Tamil Nadu, this place is rich, complex and layered with history through different periods of time, inspiring literary work and holding cultural significance to different groups. And much like the rest of Tamil Nadu, it has been a place of seamless harmony between different faiths of the Tamil people, who walked up the hill as friends and neighbors, made their respective prayers, and walked downhill to continue their lives in perfect solidarity for hundreds of years. So what changed now? The entry of the *RSS-BJP Sangh Parivar* and their desperate attempts to find a footing in Tamil Nadu.

The RSS-BJP Strategy

The most recent attempt of the RSS-BJP leaders to enter Tamil Nadu is a boringly predictable strategy that they have tested across the nation. Create a problem when none exists. Spread propaganda. Repeat until seeds of doubt are planted in people's minds. Use that to divide and conquer. While the fact that they literally pointed at a survey pole (a geographic mark to measure the area) as a holy spot to light a lamp is perfect meme-material and laughable, it is also dangerous. It shows that they will go to any length, no matter how ridiculous, illogical, or unethical, to meet their agenda.
Human lives, social harmony, respect and dignity for each other—none of these matters. What's alarming are two things, although neither is new:

1. Their absolute lack of morals and concern for human lives. If they had managed to succeed in causing an actual riot, they wouldn't care less for the lives lost or people injured. This is literally their modus operandum.

2. How strategically they have injected the judiciary system, government offices, media, educational institutions, and corporate webs by appointing individuals who are part of the same ideology, laying the foundation for a larger, more destructive purpose.

The judge who ruled in favour of lighting lamps in the *"deepa thoon"* is GR Swaminathan, the man known for his casteist remarks and disrespectful comments on the Indian Constitution. The man, a brahmin who doesn't hide his RSS affiliations, also proudly claimed onstage to an audience that a murderer in a hit and run case got away without legal consequences because if you "protect the *vedas*, the *vedas* will protect you." This same man stated in this ruling, "By lighting the lamp on the *Deepathoon*, which is meant for that purpose, the structure of the *Dargah* is not in any way affected, and the *Dargah* is located at a safe distance of not less than 50 meters away from the stone pillar." Except that the *"deepa thoon"* is a survey pole, a mere measuring unit, which is said to be located about 90 meters from the Dharga.

Repeating The Horrors Of The Past

While the age-old formula of triggering a riot between Hindus and Muslims is uncreative and predictable, it cannot be dismissed as ineffective or harmless. Neither can it be discounted as sporadic, poor attempts to gain political clout by a party that has repeatedly failed in the two Southern-most states of the nation. The ultimate goal of the RSS is a Hindu rashtra, which negates the fundamental values of our Constitution and our values as a secular country. And RSS operations are neither covert nor indirect in their influence. We cannot forget the horror stories that our country lived through, the lives lost to bloody massacres and state-backed religious violence in the past, and the increased attacks and systemic discrimination against minorities since the BJP came into power. And all of this, including getting away with massacres and destroying entire neighbourhoods, was possible only through extremist ideologies seeping into the judiciary system. Those who now scream that a

court order has been disobeyed stayed silent when rapists were set free and garlanded by BJP. And they continue to stay silent when activists, journalists and students have been jailed unlawfully for years.

While we in the South find in unimaginable that people are lynched, have their homes bulldozed, and children live under a constant fear of violence due to their religious beliefs in many parts of North India, what we may fail to remember is that all of this has been part of the plan all along. The RSS has been doing 100 years of systemic groundwork to reach its goal of a *Hindu rashtra* since 1925. Which means, while the rest of the country was fighting for freedom, risking their lives, sacrificing their livelihood, strategising, and resisting the British Empire in every corner, the RSS was preoccupied with the archaic and anti-human *Manu dharma.* While they sell themselves as patriots today and quickly label those who fight for equality as anti Indian, during the Independence movement, the RSS ordered its members to "stay aloof," "refrain from the Quit India Movement", and "willingly comply with the British law." The man who became the leader of the RSS in 1940, MS Golwalkar, chose to fight for his idea of freedom through "defending religion and culture" in his own words and not by fighting the British. He called the anti-British nationalism as a "reactionary view."

The Core of Hindutva is Caste Dominance

If they wouldn't even fight for independence along with the rest of the country and willingly offered their servitude to their colonial masters, is there anyone the RSS/BJP is loyal to at all? They have always been and will always be the soldiers of *Manu dharma.* And who rules in *Manu dharma?* Who benefits from the principles of *sanatana?* Not
the majority of *Hindus*, not women, not you, not me. But *brahmins*, who sit atop the caste pyramid.This is why Dr Annal Ambedkar said that the power simply transferred from the British into the hands of *brahmins* after independence. While they market the idea of a *"Hindu" rashtra,* in essence, they mean a *brahmin rashtra.* Almost every human right, from the right to education, right to accessing public resources like drinking water
and roads, right to work, minimal wage, fair pay, the right of girl children to enter schools (thanks to Jyoti Bhai Phule), right for

women to own and inherit property from parents, right to fight child marriage, right to enter temples, and every other right to a dignified life has been fought for by social justice heroes who fought against these casteist *sanatana* norms that served a tiny group. It's important for the youth to remember that the basic human rights we take for granted today were once denied to 95% of the population for centuries.

The strategic positioning of upper caste members and RSS-aligned individuals in the judiciary is alarming. In 2023, 14 out of 34 sitting judges of the Supreme Court were brahmins. They hold 70% of government jobs, 63% of civil service roles, and control 71% of key positions in the media, while constituting only 5% of the population. 44% of the board of directors in the corporate sector are brahmins.

Attempting Another Ayodhya

Imagine the audacity of H Raja, when he called Thirupurakundram as the "Ayodhya of the South"! BJP's tactic of inciting fear that "*Hindus* are under attack" or "*Hindu* temples are under attack" is a classic right-wing extremist strategy that we have seen across the globe by dictators. Their aim is to trigger an emotional reaction by repeating lies to the point it colours our perception of reality. We've seen how blindly the MAGA supporters of Trump parrot and spread propaganda against ethnic and religious minorities. The strategy is old, the formula is the same. But the costs of using religion to divide people are high. The costs are the future of our children. The costs, as we have seen in many other parts of India, are precious human lives.

Tamil Nadu is a place where religious solidarity has been a way of life, long before diversity and inclusivity became corporate key terms and hashtag trends. But as fascist forces get more desperate to break into our land, we need to stay vigilant. They haven't broken the barriers, *yet.* Our rationalist approach to identify who our real enemy is the key to keeping them out. Having zero tolerance for hate speeches and countering every lie with truth, especially within our own social circles, is critical. Their tactic is tried and tested: repeat lies, incite fear, flood people with propaganda. But we cannot let them

normalise hate or religious divide as they have managed to do in many parts of North India.

Tamil Nadu Is the Antidote To Ayodhya

The beloved people of Madurai have shown, once again, that there is no "us vs them" in our land. All those videos of asking any passersby in the streets of Madurai what they think of the issue reveal the ground reality: every single one of them cooly embraces all faiths like it's like the most effortless, natural thing to do. And they know who the outside forces are and what their hidden motive is. And when in Madurai, inclusive political wisdom is served with such suave and slang.

In Tamil Nadu, we turn BJP's clumsy attempts of chanting "Jai Shri Ram" instead of "Arogara" into trolls. We have an apt Vadivelu dialogue for every blunder of BJP and its failed attempts in decoding our ideology. When they flood social media with "*Hindus* under attack," we flip the algorithm by endless videos of solidarity that's an everyday occurrence in our state – Muslims taking "seer" to Amman temples, Iyyapan Samis in black veshti helping out in a mosque, and Mother Mary's procession being carried out
by Hindus and Muslims. And atheists being the most vocal for the religious rights of all. This is us. This is who we have always been – a symbol of resistance against fascist forces. This is what India needs to see as a possibility for the whole nation – that both peace and development are possible as long as we take care of each other, irrespective of religious beliefs. In essence, the *samatuvam* of Tamil Nadu, is the antidote to Ayodhya.

கல்வியில் சிறந்த தமிழ்நாடு -மாணவர் நலன் காக்கும் மகத்தான முதல்வர் - முனைவர். கா. நீலகிருஷ்ணபாபு திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கம்

ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் இளைஞர் நலனை அடித்தளமாகக் கொண்டது. இந்தியாவின் தெற்கு மாநிலங்களில் கல்வியிலும், இளைஞர் நலனிலும் முன்னோடியாகத் திகழும் தமிழ்நாட்டில், கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் சமூகநீதியைக் காப்பது என்பது வெறும் அரசாங்கத்தின் கடமையல்ல; அது நீண்டகால திராவிட இயக்க சித்தாந்த மரபின் தொடர்ச்சியாகக் கருதப்படுகிறது.

மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையின் கீழ் தமிழ்நாடு அரசு செயல்படுத்தியுள்ள மாணவர் நலன் சார்ந்த புரட்சிகரத் திட்டங்கள் ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளன. சமூக நீதியை உறுதி செய்யும் நோக்கத்துடன், கல்வி, ஊட்டச்சத்து, திறன் மேம்பாடு நிதி உதவி மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்து, மாணவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் முதல்வர் ஸ்டாலின் அவர்கள் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறார். அவர் தலைமையிலான திமுக அரசு , மாணவர்களின் கல்வி மற்றும் சமூக நலனுக்காக அறிமுகப்படுத்திய முக்கிய திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகளின் சமூக-அரசியல் தாக்கத்தை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் முதன்மையான நோக்கம்.

கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் சம வாய்ப்பை உறுதி செய்வதில் இத்திட்டங்கள் எந்த அளவுக்குப் பங்களிப்புச் செய்துள்ளன என்பதைத் தக்க தரவுகளுடனும் புள்ளிவிவரங்களுடனும் நிறுவுவதே இக்கட்டுரையின் களம் ஆகும்.

முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட "நான் முதல்வன் திட்டம்", "புதுமைப் பெண் திட்டம்" மற்றும் "காலைச் சிற்றுண்டித் திட்டம்" போன்ற திட்டங்கள், தமிழ்நாட்டின் மாணவர் சமூகத்தின் கல்வி, உடல்நலம் மற்றும் எதிர்கால வாய்ப்புகளில் குறிப்பிடத்தக்க, நிரந்தரமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனவா? சமூக நீதியை அடைவதில் இத்திட்டங்கள் ஒரு மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளனவா? உள்ளிட்ட கேள்விகளுக்கு விடை தேடுவதே இக்கட்டுரையின் இலக்கு.

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர்களான பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்றோரின் வழியில், ஸ்டாலினின் திராவிட மாடல் அரசு கல்வியை ஒரு அடிப்படை உரிமையாகவும், சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதற்கான ஆற்றல் மிக்க கருவியாகவும் கருதுகிறது. குறிப்பாக, அரசுப் பள்ளிகளில் படிக்கும் விளிம்பு நிலை மாணவர்களுக்கும், கிராமப்புற மாணவிகளுக்கும் உயர்கல்வியை எட்டச் செய்வதற்கான தடைகளை நீக்குவதே திராவிட மாடலின் நீட்சியாகும். இந்தச் சித்தாந்தப் பின்னணியிலிருந்துதான், ஸ்டாலின் அவர்களின் மகத்தான திட்டங்கள் உருப்பெறுகின்றன.

முதல்வர் ஸ்டாலின் அவர்கள், கல்வி என்பது அரசின் முக்கிய முதலீடு என்ற கொள்கையின் அடிப்படையில், கல்வித்துறைக்கான நிதி ஒதுக்கீட்டை ஆண்டுதோறும் கணிசமாக உயர்த்தி வருகிறார். இது, கல்வி உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும், மாணவர்களுக்கு நேரடி நிதிப் பயன்களை வழங்குவதற்கும் பெருவாய்ப்பாக அமைகின்றது.

2024-25 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையின்படி (Budget) கல்வித் துறைக்கான ஒதுக்கீடுகள் மாணவர் நலனில் அரசு கொண்டுள்ள அக்கறையைத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன.

• பள்ளி கல்வித் துறை: 2024-25 நிதியாண்டில் பள்ளி கல்விக்காக ₹44,042 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது முந்தைய பட்ஜெட்டை விட ₹3,743 கோடி கூடுதல் ஆகும். • உயர்கல்வித் துறை: உயர்கல்விக்காக ₹8,212 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை, அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகளை உறுதி செய்யும் அரசின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறது. இத்தகைய பிரம்மாண்டமான நிதி ஒதுக்கீடுகள் மூலம் பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டம், அரசுப் பள்ளி உள்கட்டமைப்பு மேம்பாடு, ஆசிரியர்களுக்கான திறன் பயிற்சி மற்றும் புதிய தகைசால் பள்ளிகள் (Schools of Excellence) தொடங்குதல் போன்ற புதிய முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பெண்களின் உயர்கல்வி சேர்க்கையை உறுதி செய்வதற்காக முதல்வர் ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட்ட மிகச் சிறந்த திட்டங்களுள் ஒன்று புதுமைப் பெண் திட்டம் ஆகும். அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12-ஆம் வகுப்பு வரை படித்து, உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ₹1000 நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, உயர்கல்வியில் மாணவிகளின் சேர்க்கை சதவீதம் 27% இலிருந்து 34% வரை அதிகரித்துள்ளது என மாநிலத் திட்டக்குழு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 2023 ஆம் ஆண்டு

இறுதி வரை 2,30,820-க்கும் மேற்பட்ட மாணவிகள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். பொருளாதாரச் சவால்களால் கல்வியைத் தொடர முடியாத 10,146 மாணவிகள் மீண்டும் உயர்கல்விக்குத் திரும்பியுள்ளனர் என்பது இத்திட்டத்தின் மகத்தான வெற்றியாகும்.

அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களின் மருத்துவம் மற்றும் தொழில் கல்லூரிகளுக்கான கனவை நனவாக்க, 7.5% உள் ஒதுக்கீடு திட்டம், ஸ்டாலின் அரசால் திறம்பட செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2024-25 பட்ஜெட்டில், இந்த 7.5% உள் ஒதுக்கீடு திட்டத்தில் பயிலும் 28,749 மாணவர்களின் கல்வி கட்டணத்தை அரசே ஏற்கிறது. இத்திட்டம், நகர்ப்புற மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களின் பொருளாதரச் சுரண்டலலிருந்து விளிம்பு நிலை மாணவர்களை விடுபடவைத்துள்ளது. இது, முதல்வர் ஸ்டாலினின் சமூக நீதி மற்றும் பொருளாதார விடுதலைக்கான முன்னெடுப்பிற்கு வலுவான சான்றாகும் .

பெருந்தொற்றுக் காலத்தில் ஏற்பட்ட கற்றல் இடைவெளியைக் குறைக்கவும், ஆரம்பக் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும், அரசு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தின் மூலம், 1.8 கோடி மாணவர்கள் 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் மூலம் பயிற்சி பெற்றுள்ளனர். எண்ணும் எழுத்தும் திட்டத்தின் மூலம் 8 வயதுக்குட்பட்ட அனைத்து மாணவர்களும் அடிப்படை கணித மற்றும் வாசிப்புத் திறன்களைப் பெறுவதை உறுதி செய்திருக்கிறது. இது, அடித்தளக் கல்வியை உறுதி செய்யும் ஸ்டாலின் அரசின் தொலைநோக்குப் பார்வையின் வெளிப்படாகும்.

கல்வி கற்பதற்கு உடல்நலமும், சரியான ஊட்டச்சத்தும் அடிப்படைத் தேவைகளாகும். மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதிலும், அவர்களின் உடல் ஆரோக்கியத்தை உறுதி செய்வதிலும் முதல்வர் ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு, முற்போக்கான திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. இதில் முதன்மையானது, புரட்சிகரமான முதலமைச்சரின் காலைச் சிற்றுண்டித் திட்டம் ஆகும். அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்குக் காலை உணவு வழங்குவதன் மூலம், அவர்களின் ஊட்டச்சத்துப் பற்றாக்குறையைப் போக்குவதற்கும், பள்ளிகளுக்குத் தவறாமல் வருகை தருவதற்கும் இத்திட்டம் வழிவகுக்கிறது. மாநிலத் திட்டக் குழுவின் ஆய்வின்படி (மார்ச் 2024), இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பள்ளிகளில் மாணவர்களின் வருகைப் பதிவு (Attendance) சராசரியாக 90% முதல் 95% வரை அதிகரித்துள்ளது. பெரம்பலூர் மற்றும் அரியலூர் போன்ற பின்தங்கிய மாவட்டங்களில் வருகைப் பதிவு 100% அதிகரிப்பை அடைந்துள்ளது குறிப்பிடத்தக்க சாதனையாகும். இந்தத் திட்டம் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளின் பள்ளிக்குச் செல்லும் ஆர்வத்தை அதிகரிப்பதோடு, வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் காலை நேரச் சுமையைக் குறைத்து, பெண்கள்

பொருளாதார நடவடிக்கைகளில் கூடுதல் கவனம் செலுத்த உதவுகிறது. இவ்வாறு இத்திட்டம் கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பொருளாதாரம் எனப் பல பரிமாணங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

மாணவர்களின் உடல்நலன் மற்றும் மனநலன் காக்கப் பள்ளிகளில் மருத்துவ முகாம்கள், சத்துணவு வழங்குதல் மற்றும் இலவச சுகாதாரப் பரிசோதனைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. சுகாதாரத் துறை மூலம், பள்ளி மாணவர்கள் எதிர்கொள்ளும் மன அழுத்தப் பிரச்சினைகளைக் கையாள, மனநல ஆலோசனை சேவைகள் பல பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்டு, முதல்வர் ஸ்டாலின் அவர்களின் நிர்வாகத்தின் தனிப்பட்ட அக்கறையை வெளிப்படுத்துகின்றன.

வெறும் உயர்கல்விச் சேர்க்கை இலக்குகளைத் தாண்டி, மாணவர்கள் தற்காலத் தொழில்நுட்பத் துறையில் வேலைவாய்ப்பை எளிதாகப் பெறும் வகையில், நான் முதல்வன் திட்டம் ஒரு முழுமையான திறன் மேம்பாட்டுப் பாலமாகச் செயல்படுகிறது. இத்திட்டம் மாணவர்களின் எதிர்கால வாழ்வாதாரத்தை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களை, செயற்கை நுண்ணறிவு, தரவு அறிவியல், ரோபாட்டிக்ஸ் போன்ற நவீனத் தொழில்நுட்பத் திறன்களில் பயிற்சி அளித்து, தொழில்துறை 4.0 (Industry 4.0) சவால்களை எதிர்கொள்ளத் தயார் செய்கிறது . 2025 ஜூலை நிலவரப்படி, இத்திட்டத்தின் கீழ் 41,38,833-க்கும் மேற்பட்ட மாணவர்களும் 1,00,960 விரிவுரையாளர்களும் பயிற்சி பெற்றுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று, இதுவரை 1,48,149-க்கும் மேற்பட்ட மாணவர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர் (பொறியியல் மற்றும் கலை அறிவியல் கல்லூரிகளைச் சேர்த்து). இது, மாணவர்களின் கல்விச் சான்றிதழை வெறும் காகிதமாக மட்டும் பார்க்காமல், அதனை வேலைவாய்ப்புக்கான உத்தரவாதமாக மாற்றிய முதலமைச்சரின் தொலைநோக்குச் சிந்தனையைக் காட்டுகிறது. வேலைவாய்ப்பை உருவாக்கக் கல்வி நிறுவனங்களை மேம்படுத்துவதில் ஸ்டாலின் அரசு முக்கியப் பங்காற்றுகிறது. 42 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள் தொழில்துறை 4.0 தரத்துக்கு உயர்த்த ₹3,014 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது, அரசு நிறுவனங்களில் படிக்கும் மாணவர்களுக்கும், தனியார் நிறுவன மாணவர்களுக்கும் இடையே உள்ள திறன் இடைவெளியைக் குறைக்க உதவுகிறது.

பள்ளி மாணவ மாணவியருக்கான இலவசப் பேருந்துப் பயணம் (Bus Pass) நீடிக்கப்பட்டதோடு, கல்லூரி மாணவிகளுக்கும் இலவசப் பேருந்துப் பயணத் திட்டம் வழங்கப்பட்டு, பொருளாதாரச் சுமையைக் குறைத்து, உயர்கல்விக்கான அணுகலை எளிதாக்கியிருக்கிறது.

முதல்வர் ஸ்டாலின் அவர்களின் மாணவர் நலன் காக்கும் முயற்சிகள் பரவலாகப் பாராட்டப்பட்டாலும், சில விமர்சனங்களையும் எதிர்கொள்கின்றன. உதாரணமாக, 'இலவசக் கலாச்சாரம்' குறித்த விவாதங்கள் அவ்வப்போது எழுவதுண்டு. ஆனால், புதுமைப் பெண் திட்டம், காலைச் சிற்றுண்டித் திட்டம் போன்றவற்றை வெறும் இலவசங்களாகக் கருதாமல், அவை மாணவர்களின் மனிதவள மூலதனத்தில் செய்யப்படும் மூலதன முதலீடுகள் (Human Capital Investment) ஆகும் என்பதை அண்மையில் நடைபெற்ற "கல்வியில் சிறந்த தமிழ்நாடு" நிகழ்வின் மூலம் ஸ்டாலின் அரசு நிரூபித்துக் காட்டியிருக்கிறது. இப்படிப்பட்டத் திட்டங்கள், கல்வியைத் தொடர்வதற்கான தடைகளை நீக்கி, பின்தங்கிய மாணவர்களைச் சமூகத்தின் மையநீரோட்டத்திற்குக் கொண்டுவரும் சமூகநீதிக் கருவிகளாகும்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நிர்வாகத்தின் கீழ் தொடங்கப்பட்ட பல்வேறு திட்டங்கள், மாணவர் நலனைக் கல்வி, ஊட்டச்சத்து, திறன் மேம்பாடு எனப் பல்வகைப்பட்ட வழிகளில் உறுதி செய்துள்ளன. கல்விக்கான நிதி ஒதுக்கீட்டின் பெருக்கம், புதுமைப் பெண் திட்டத்தால் அதிகரித்த உயர்கல்விச் சேர்க்கை, காலைச் சிற்றுண்டித் திட்டத்தால் அதிகரித்த வருகைப் பதிவு மற்றும் நான் முதல்வன் திட்டத்தால் கிடைத்த வேலைவாய்ப்புகள் – இவை அனைத்தும் மாணவர்களின் வாழ்க்கைத் தரத்தில் நீண்ட கால மற்றும் நிலையான மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. இந்தத் திட்டங்கள், வெறும் சலுகைகளாக இல்லாமல், விளிம்புநிலை மாணவர்களுக்குச் சமூக சமத்துவத்தையும் (Social Equity) பொருளாதார மேம்பாட்டையும் உறுதி செய்வதில் முதன்மையான பங்கை வகிக்கின்றன.

திராவிடச் சித்தாந்தத்தின் அடிப்படை இலக்கான 'கல்விக்கு முக்கியத்துவம்' என்ற கோட்பாட்டை, நவீனத் தேவைகளுக்கேற்பச் சீரமைத்து, அதனைச் சாமானிய மாணவர்களுக்கும் கொண்டு சேர்த்ததில் ஸ்டாலின் அரசு வெற்றிகரமாகச் செயல்பட்டுள்ளது. அரசின் நிலைப்பாடும் முன்னெப்போதும் இல்லாத சாதனைகள் நிகழ்ந்தபோதும், நீட் தேர்வு போன்ற தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளிலிருந்து தமிழ்நாட்டு மாணவர்களைப் பாதுகாப்பது மற்றும் மாநிலக் கல்வி உரிமைகளைப் பேணுவது போன்ற பெரிய அரசியல் சாவல்களும் நீடிக்கின்றன. இத்தகைய சவால்களை எதிர்கொள்ள, முதல்வர் ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு, கல்விச் சீர்திருத்தங்கள் மற்றும் கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் மாநிலக் கல்வி உரிமைகளுக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது.

கல்வி, ஊட்டச்சத்து மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றின் மூலமாக மாணவர்களின் நலனை உறுதி செய்யும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நிர்வாகம், தமிழ்நாட்டில் சமூகப் பாதுகாப்புக்கான முதலீட்டைப் பலப்படுத்தியுள்ளது. அவர் தொடங்கியுள்ள திட்டங்கள்,

தமிழ்நாட்டை அறிவுசார் சமூகமாக மேம்படுத்துவதிலும், நிலையான மனிதவள மேம்பாட்டை உறுதி செய்வதிலும் மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளன. இந்தத் திட்டங்களின் தொடர்ச்சியான மற்றும் வெற்றிகரமான செயல்படுத்தல், அவரை "மாணவர் நலன் காக்கும் மகத்தான முதல்வர்" என்ற பட்டத்திற்குத் தகுதியானவராக நிலைநிறுத்துகிறது. அவருடைய தொலைநோக்குப் பார்வை, 'அனைவருக்கும் அனைத்தும்' என்ற திராவிட மாதிரியை, கல்வியின் மூலம் அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் உறுதியான பாதையை வகுத்துள்ளது. இவ்வாறு, முதல்வர் ஸ்டாலின் அவர்களின் தலைமையின் கீழ், தமிழகத்தின் மாணவர் சமூகம் ஒரு பாதுகாப்பான, திறன்மிக்க மற்றும் வாய்ப்புகள் நிறைந்த எதிர்காலத்தை நோக்கிச் செல்கிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

A Rational Analysis of People Leaving Hinduism - Mohit Palagiri

As a non-religious individual who strongly opposes all religious doctrines and practices, I have recently come across both a claim and a fact that Hindus are leaving the fold of religion.

Many blame Abrahamic religions, low fertility rates, and family planning. However, I would like to present two points that I have identified through my study of society, offering insights based on the knowledge I have acquired.

Caste in Hinduism- The problem with Hinduism is Caste, and yes, the Right Wing tries to refurbish it by using varna, claiming that anyone can do any work. I would like to pose a direct question, I will not even bring up the caste of SC/ST, but can any OBC at least become a Mathadipathi (head) of a large, well-known temple or monastery?

The answer is no, and the priestly class will offer explanations to pacify the issue or divert the discussion without addressing the core question.

Periyar echoed that there must be equality in religion, but even till date no non-Brahmin can become a priest in major temples, and even in some villages, if a Dalit walks into a temple, it is "purified" using cow urine. Certain sections of people are forced to stay away from the village, are not allowed to live with others, and cannot use the same water bodies. Dalit boys are even killed if they marry someone from an upper caste.

As Ambedkar echoed at the 1938 Yeola Conference, what is the use of me being a Hindu if I have to face this much discrimination?

Sangh / Right Wing Hindu fanatics claim that the Portuguese brought caste and that the British intensified it. So let us debunk this claim.

Why did Valluvar state that everyone is born equal in his work Thirukkural during the BCE period, countering Varnashrama Dharma? Why did Buddha oppose Brahmanism in the 5th century BCE? Why did Ramanujacharya bring Dalits and other lower-caste people, make them wear the sacred thread, and ask them to be Brahmins, even building a temple for them in Melukote, Karnataka, during the 10th century CE?

Annamacharya, a Telugu saint, composed a song in the 15th century stating that a Brahmin and a Chandala are equal in front of God. In the same century, Guru Nanak opposed Brahmanism and founded Sikhism, and in the 17th century, Guru Gobind Singh promoted the turban system to assert equality. In the 13th century, Basavanna from Karnataka strongly opposed Brahmanism, promoted equality,

and formed a separate sect called Lingayatism. Thus, there were many religious leaders and reformers who fought against the caste system and Brahmin dominance long before colonialism began in India. As they realized that Caste System destroys Hinduism and makes people leave Hinduism.
The Portuguese, whose influence was limited to mostly eastern coastal regions later reduced to barely 1% of Indian territory- Goa, Dadra and Nagar Haveli, and Daman and Diu never had the social dominance needed to introduce or restructure caste in Indian society. In contrast, the Portuguese traveller Domingo Paes documented how Brahmins already exercised significant power in the Vijayanagara Empire.

The British colonials used a divide-and-rule policy, but they also established educational institutions, common laws, employment opportunities, and army recruitment. They allowed many Indian individuals - Ambedkar, Periyar, Jyotiba Phule, Rettamalai Srinivasan, etc. as well as organizations such as the Justice Party, Satyashodhak Samaj, and the Madras Depressed Classes Federation to fight against caste and its discrimination.

Upper castes often benefited under invaders, serving as ministers and officials. Despite Sanghi criticism of Aurangzeb and the British, Aurangzeb granted tax exemptions to Brahmins and to Maratha and Rajput officials, with Hindus forming a larger portion of his bureaucracy compared to Muslims. During British rule as well, around 3% of Brahmins held a large share of bureaucratic and nominated political positions.

Even historically, the first Christians of India known as Syrian Christians largely consisted of former Brahmins and upper castes. The first known Muslim convert is said to be Cheraman Perumal, a Chera king. The very religions that Hindu fanatics often attack must recognize that Brahmins and upper castes were among the earliest entrants into these religions.

Another problem associated with caste is that inter-caste marriages happen very less. There was a documentary on the Parsis, a small religious community primarily based in Bombay, where some influential people expressed concern about their declining population due to endogamy. As a result, the community has begun opening itself to interfaith marriages without major issues. A. B. Godrej, the Chairman of the Godrej Group, mentioned that religion must change according to the times.

Similarly, Hindus are known for having the highest rate of intra-caste marriages compared to inter-caste marriages. The Centre for Cellular and Molecular Biology conducted a study showing that children born from same-caste marriages face a higher risk of genetic disorders. A study from Georgetown University, USA, claimed that children from inter-caste marriages show greater potential and perform better compared to children from same-caste marriages.

In society, everyone must adopt inter-caste marriages, and one can hope for a day when same-caste marriages are outlawed. If someone is worried about caste purity, they must realize that thousands of years ago, everyone on Earth came from mixed ancestry, and before that, our human ancestors trace back to Africa. Biologically, we all belong to ONE FAMILY. Even Thanthai Periyar rejected the racial theory of the Nazis.

Caste is an ongoing problem, and it would require an entire book to highlight its atrocities. Many people from lower castes converted to Abrahamic religions in search of equality, but there are instances where they still face caste discrimination within those religions, and the concept of inter-caste marriages is also largely absent. In a documentary on Ambedkar's Neo-Buddhism, converts said they are still labelled as Dalits, yet they came out system.

Historically, people turned to Buddhism in ancient times, Sikhism in medieval North India, Islam in the South, and in modern times to Christianity, Islam, and Neo-Buddhism (in Maharashtra). However, no religion guarantees equality at any cost.

Once, Pope John Paul II apologized for the Church's sins, including the African slave trade, the Inquisition, the Holocaust, religious wars, the persecution of Galileo, and many others. Although nothing can undo the past, such acknowledgment mattered.

In contrast, within Hinduism, no highest religious seer or biggest organization has apologized for the caste atrocities committed in the past atrocities as cruel as Roman slavery and apartheid. Instead of acknowledging or apologizing for caste oppression, the Hindu elite often deflect responsibility onto others or attempt to justify it. Thus, Hinduism could have seen far greater growth had caste not existed.

Lack of reach- Let me give you one example. Please take your time and go to YouTube and search for Worst Slums in India, Africa, Philippines, and South America. You will see Christ's photos or cross symbols along with local churches. Can we see any Hindu priest or preacher going there and promoting the religion? The answer is no, a big no!!! On the other hand, a Christian pastor stays in the slum and tries to achieve his target.

Although having Christ's photos did not change their lives, poverty has remained the same. People in slums are often treated as pawns for crime, and none of them were transformed by religion. They were changed only by the concept of education.

Well, the caste point is for self respect and discrimination, whereas this topic comes under belief system. Frankly every religion is a collection of fables and few morals where every priest/book tries to say the same.

Once, Swami Vivekananda said, "Teach religion to the poor and lower classes." Ramanujacharya preferred to be with poor people rather than with kings or merchants. Some saints believed that the poor must hear religion and that it should be accessible to them. But today, many gurus have become commercialized, and even the middle class cannot access them.

For instance, many religious organizations like ISKCON, Isha, and others go to cities like New York, Sydney, Tokyo, and many other urban centers. They even visit elite private colleges and corporate offices. But why don't they visit slums or villages to preach their god and provide services? For example, search for ISKCON New York versus ISKCON Vyasarpadi or ISKCON Dharavi services and compare the results. The only exceptions are the Ramakrishna Mission, while the RSS claims to do service, but it appears primarily aimed at gaining political ground.

In India, the majority of the population belongs to rural and middle-class backgrounds, yet so-called majority religion preachers remain distant and appearing only during festivals or specific religious events. Religious preaching is largely restricted to a single caste, the Brahmins, and no one outside this caste is allowed to preach. On June 24, 2025, two Yadavs (Shudras) were tonsured by Brahmins because they went to preach the Bhagavad Gita, the core text of Hinduism. They were tonsured solely because they were not Brahmins, as only Brahmins are permitted to preach.

So how can a religion be accessible to the common people without preachers speaking their language and interacting with masses? Instead, it is being extremized by Hindutva miscreants- VHP, Bajrang Dal, and others, who storm into private places, malls and other religious organizations all under the pretext of "saving culture." Their actions resemble Taliban-style moral policing. If their intention is truly to preserve culture, why can't they preach what they believe through dialogue instead of barging into private spaces and terrorizing people?
As per a DW documentary, the same Hindutva fanatics forcefully reconverted a Christian tribal to Hinduism in the name of Ghar Wapasi. If they want to reconvert someone, why can't they preach the greatness of their religion and persuade him to return voluntarily?

The same Hindutva fanatics have beaten Swami Agnivesh, an Arya Samajist who worked for equality; assaulted C. S. Rangarajan, a Vaishnavite priest who promoted equality among all for opposing Hindutva extremism; and even threatened the Ramakrishna Mission for celebrating Christmas. Hence, these people are hostile even towards their own community members who attempt genuine reforms. In that sense, they are comparable to the Ku Klux Klan within Christianity and the Taliban within Islam.

Christian Pastors can come from any caste, though within the same religion, bishops are often dominated by upper castes. However, pastors go to slums and middle-class areas, where they speak about miracles and encourage people to

enter the church, giving them a sense of community. In contrast, no Brahmin preacher goes to slums or ordinary middle-class localities to preach, nor do they allow others to preach. They ensure that the message of God or their scriptures remains confined within their own caste.

Henceforth, Hindus neither go and preach to masses nor allow anyone else to preach. When the downtrodden convert to another religion, they are mocked or even threatened. Hindus often ignore the fact that the majority who convert come from downtrodden and middle-class backgrounds, where religious preaching is largely inaccessible. There is no preacher who approaches them with pamphlets or books to study.

Conclusion- As a hardcore non-religious person, I recognize the fact that every philosophy and religion has the right to preach and promote itself. That said, Hinduism also has this right. As an unapologetic Periyarist, I have highlighted what I see as the core problems, and if any Hindu is reading this, instead of reacting with rage or curses, I request that you read and re-read the article carefully.

Christianity in Europe faced a major backlash in the 16th century, when churches were deeply corrupt and dominated by powerful clergy. Martin Luther initiated reforms by asserting that people should be answerable to God, not to the Church. He translated the Bible from Latin into German (the common language of the people) , opposed priestly dominance, and emphasized giving money to the poor rather than to the Church. This movement, known as the Reformation, played a key role in transforming Christianity.

As such, Hinduism must need another set of reforms for its own growth.